**NST Campus**

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 09 | கர்நாடக சங்கீதம் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

## பகுதி-I

சரியான விடையைத் தெரிவு செய்க.

01) அலங்காரம் ஒன்று எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை எத்தனை?

1.6 2.8 3.10 4.12

02) சதுஸ்ர ஜாதி ரூபகதாளத்தின் குறியீட்டைத் தருக?

1. $0|_3$ 2. $0|_4$ 3. $0|_5$ 4. $0|_7$

03) கிராமிய நடனங்களில் ஒன்று?

1.கும்மி 2.ஜதீஸ்வரம் 3.பதம் 4.அலாரிப்பு

04) தாட்டு வரிசைகளை இயற்றியவர் யார்?

1.முத்துத்தாண்டவர் 2.பாபநாசம்சிவன் 3.தியாகராஜர் 4.புரந்தரதாசர்

05) மேலத்தேய இசையில் “மேஜர் ஸ்கேல்” என அழைக்கப்படும் இராகம் எது?

1.மாயாமாளவகௌளை 2.மோகனம் 3.சங்கராபரணம் 4.ஹரிகாம்போதி

06) ஜம்பை தாளத்தின் குறியீட்டைத் தருக?

1.lUo 2.loo 3.lol 4.ol

07) ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் உருப்படி எது?

1.ஜதீஸ்வரம் 2.கீர்த்தனை 3.கீதம் 4.பதம்

08) “சாமி நாதா” என்னும் கீதம் அமைந்த இராகம் என்ன?

1.மலகரி 2.ஹரிகாம்போதி 3.சாவேரி 4.சுத்தசாவேரி

09) சபாகானத்திற்காக சில ஸ்வர ஜதிகளை இயற்றிய வாக்கேயக்காரர் யார்?

1.புரந்தரதாசர் 2.சியாமா சாஸ்திரி 3.பாபநாசம்சிவன் 4.முத்துத்தாண்டவர்

10) சுருதிக்காக பயன்படுத்தப்படும் நரம்புக்கருவி எது?

1.தம்புரா 2.வயலின் 3.சுருதிப்பெட்டி 4.ஹார்மோனியம்

11) “ராமதாச” என்னும் முத்திரையை கொண்ட வாக்கேயக்காரர்?

1.பாபநாசம்சிவன் 2.சியாமா சாஸ்திரி 3.புரந்தரதாசர் 4.முத்துத்தாண்டவர்

12) “கண்டசாபு” தாளத்தில் அமைந்த திருப்புகழ் ஒன்று எது?

1.பக்தியால் யானுனை 2.இறவாமல் பிறவாமல்
3.காலனிடத்தணுகாதே 4.மானினேர் விழி

13) திவ்யநாம கீர்த்தனையை இயற்றியவர் யார்?

1.தியாகராஜர் 2.முத்துத்தாண்டவர்
3.முத்துஸ்வாமி தீட்ஷிதர் 4.பாபநாசம்சிவன்

14) “வாசரவணனே” என்னும் சஞ்சாரி கீதம் அமைந்த இராகத்தின் மேள எண் என்ன?

1.22 2.15 3.29 4.28

15) கொம்புமுறி விளையாட்டின் போது கொம்பு எடுக்கப்படும் மரம் எது?

1.கரையாக்கு மரம் 2.வேம்பு மரம் 3.நாக மரம் 4.பலா மரம்

16) திருவாசகம் பாடப்படும் இராகத்திற்கு ஒப்பான பண் எது?

1.செந்துருத்தி 2.பழந்தக்கராகம் 3.முல்லை 4.தக்கேரி

17) மாயாமாளவகௌளையில் உள்ள தீவிர ஸ்வரங்கள் எத்தனை?

1.2 2.3 3.4 4.5

18) வட்டமிட்டு கைகொட்டி ஆடப்படும் விளையாட்டு எது?

1.கும்மி 2.காவடி 3.கோலாட்டம் 4.வசந்தன்

19) நாட்டார் பாடல் வகையைச் சேர்ந்தது?

1.விவசாயப் பாடல் 2.மலைநாட்டுப் பாடல் 3.ஒப்பாரிப் பாடல் 4.யாவும் சரி

20) ஆலய உற்சவ காலங்களில் இசைக்கப்படுகின்ற பண் எப்பெயர் கொண்டு அழைப்பர்?

1.திருச்சாழல் 2.திருவாசகம்
3.திருப்பொன்னூஞ்சல் 4.நவசந்திப்பண்

21) ஜாதி பேதம் அடையும் அங்கம் எது?

1.லகு 2.குரு 3.புலுதம் 4.துருதம்

22) “சந்தனத்தையே அரைத்து” என்ற காவடிச்சிந்து அமைந்துள்ள நடை?

1.கண்டநடை 2.திஸ்ரநடை 3.சதுஸ்ரநடை 4.மிஸ்ரநடை

23) பாபநாசம் சிவன் வாழ்ந்த காலப்பகுதி?

1.1630-1710 2.1890-1973 3.1650-1850 4.1810-1910

24) கொம்புமுறி விளையாட்டில் கண்ணகிக்குரிய கட்சி?

1.வட சேரி 2.வடமேற்கு சேரி 3.மேற்கு சேரி 4.தென் சேரி

25) ஹரிகதைகள் பலவற்றை நடத்தும் ஆற்றல் உடையவர்?

1.புரந்தரதாசர் 2.தியாகராஜர் 3.அருணகரிநாதர் 4.பாபநாசம் சிவன்

(25x2=50புள்ளிகள்)

## பகுதி-II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

1) பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக.

1. ஜன்னியராகம்
2. சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்

(3+7=10புள்ளிகள்)

2) பின்வருவனவற்றுள் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.

1. கொம்புமுறி
2. ஊஞ்சற்பாட்டு
3. கும்மி

(10புள்ளிகள்)

3) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.

1. மோகனம்
2. சங்கராபரணம்
3. மாயாமாளவகௌளை

(10புள்ளிகள்)

4) பாபநாசம்சிவன் வாழ்க்கை வரலாற்றை பின்வரும் விடயங்களில் விளக்குக.

I. வாழ்க்கைக் காலம்
II. பெற்றோர் பெயர்
III. நடித்த திரைப்படம் 2
IV. பட்டங்கள் 2
V. இசைப்பணிகள் 2

(2+2+2+2+2=10புள்ளிகள்)

5)

I. தம்புராவின் படம் வரைந்து பாகம் குறிக்குக.
II. இதன் அமைப்பை விளக்குக
III. சுருதி சேர்க்கும் முறையை தருக

(4+3+3=10புள்ளிகள்)

6) நீர் விரும்பிய அலங்காரம் ஒன்றை எழுதுக. (இராகம், ஆரோகணம், அவரோகணம், தாளம், அங்க அடையாளம், இயற்றியவர் என்பன உள்ளடங்கலாக)

(2+1+1+2+2+2=10புள்ளிகள்)

7) கொம்புமுறி பற்றி விளக்குக

அல்லது

ஆலயமும் இசையும் பற்றி விளக்குக

(10புள்ளிகள்)